285

# ARCHAEOLOGICAL ARTIFACTS OF SOUTH AND WEST REGIONS IN BATTICALOA

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
06 JAN 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

**Submited By**

**PRASHANTHINI MAHESWARAN**

**Registration Number – EU/IS/2007/AC/25**

**Index Number – CS 3025**

FAC285
Project Report
Library - EUSL

**DEPARTMENT OF HISTORY**
**FACULTY OF ARTS & CULTURE**
**EASTERN UNIVERSITY**
**SRI LANKA**

**2013**

PROCESSED
Main Library, EUSL

முன்னுரை

தொல் பொருட்சின்னங்கள் பற்றி ஆராய முற்படுகின்ற போது ஒரு சுருங்கிய வரையறையினுள் உட்படுத்தி விட முடியாது. இது பரந்துபட்டது விரிவானது தனி நூலாக தொகுக்கப்பட வேண்டியது. இருப்பினும் முடிந்தளவு தொகுக்கப்பட்ட செய்திகளை ஆவணப்படுத்தும் ஒரு ஆரம்ப முயற்சியாகவே இது அமைகிறது. இதுவரை ஆய்வுகளை மேற்கொண்டிருந்த தொல்லியல், வரலாற்று அறிஞர்களான பாக்கர் ( Parkar 1909) கொட்றிங்ரன், (codrinton 1924), பேராசிரியர் பரணவிதானா (Paranavitana 1970, 1982) பிற்காலத்தில் பேராசிரியர் பத்மநாதன், செல்வி க.தங்கேஸ்வரி, வெல்லவூர் கோபால் போன்ற சமூக ஆய்வாளர்களது ஆய்வு முயற்சிகள் எமது ஆய்வுக்கு முன்னோடியாக உள்ளன. அதன் அடிப்படையில் முடிந்தளவு மட்டக்களப்பு மேற்கு தெற்கு பிரதேசங்களிலுள்ள தொல்லியல் சின்னங்களை ஆய்வு செய்து அடையாளப்படுத்தியுள்ளேன். இது இப் பிரதேசங்கள் பற்றிய எதிர்கால ஆய்வுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையும்.

அந்த வகையில் தொல்லியல் ஆய்வு என்றால் என்ன? எவற்றில் உள்ளடங்கும் பிரிவுகள், அவற்றின் மூலம் அறியப்படும் வரலாற்றுச் செய்திகள், எம் பிராந்தியத்திலுள்ள தொல்பொருள் சின்னங்கள் போன்ற பல விடயங்களைக் கூறுவதாகவே இவ்வாய்வு அமைகிறது.

மட்டக்களப்பு பிரதேசம் பரந்து பட்டது என்பதால் எனது ஆய்வுப் பிரதேசமானது மட்டக்களப்பு மேற்கு, தெற்குப் பிரதேசத்திலுள்ள கிராமங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. அதனடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு வலயத்திலுள்ள ஏறாவூர்பற்று மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவு, மண்முனை தென்மேற்கு செயலகப் பிரிவுகளும் தெற்கு வலயத்தினுள் போரதீவுப் பற்றுப் பிரதேசமும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்கள் பரந்துபட்டதாக காணப்படுவதனால் தொல்லியல் சின்னங்களுள்ள வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களே இவ் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கதாகும். இப்பிரதேசங்களில் தொல்லியல் ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை ஆனால் இப் பிரதேசங்களில் தொல்லியல் ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இப் பிரதேசங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பழமைவாய்ந்த பிரதேசங்களாக காணப்படுகின்றது. இங்கு தொல்லியல் ஆய்வு என்பது மிக அவசியமான ஒன்றாக கானப்படுகின்றது. தொல்பொருள்

சின்னங்கள் பிராமிக் சாசனங்கள், நாணயங்கள், நடுகற்கள் கட்டட இடிபாடுகள் பெருங்கற்களாலான பண்பாட்டுச் சின்னங்கள், கோயில்கள், பாவனைப் பொருட்கள் என பல்வேறுபட்ட தொல்பொருள் சின்னங்கள் இப்பிரதேசங்களிலே பரவலாகக் காணப்படுகினறன. தற்போது இச்சின்னங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடதக்கதாகும். எனவேதான் முடிந்தவரை இப் பிரதேசங்களிலுள்ள தொல்பொருள் சின்னங்களை ஆய்வு செய்து ஆவணப்படுத்த முயற்சிப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

| விடயம் | பக்கம் |
|---|---|

நன்றியுரை

முன்னுரை

பொருளடக்கம்

அத்தியாயம் -01

1.0 ஆய்வின் நோக்கம் 1

1.1 ஆய்வின் கருதுகோள் 1

1.2 ஆய்வுப் பிரதேசம் பற்றிய வரலாற்றுப் பின்னனி 2

1.3 தொல்லியல் ஆய்வின் முக்கியத்துவம் 11

அத்தியாயம் -02

2.0 கல்வெட்டுக்கள் 13

2.1 பிராமிக்கல்வெட்டு 13

2.1.1 கிரந்தன் வெட்டினமலை 14

2.1.2 வெல்லாவெளிக்கல்வெட்டு 19

2.1.3 குசலான் மலைக் கல்வெட்டு 24

2.1.4 காயன்குடாக்கல்வெட்டு 36

2.1.5 கண்ணபுரம் கல்வெட்டு 37

2.2 தமிழ் கல்வெட்டு – கொக்கட்டிச்சோலை. 39

2.3 நடுகற்கள் 41

அத்தியாயம் -03

3.0 ஆய்வு பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள தொல்லியல் மூலாதாரங்கள். 44

3.1 வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள். 44

3.1.1 தாந்தாமலை முருகன் ஆலயம். 45
3.1.2 தில்லை மண்டூர் முருகன் ஆலயம். 48
3.1.3 கோவிற் போரதீவு சித்திர வேலாயுதர் கோயில். 51
3.1.4 பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார் கோயில். 53
3.1.5 சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோவில் 54
3.1.6 பண்டாரியா வெளி நாக தம்பிரான் ஆலயம் 55

3.2 புராதன கட்டிட இடிபாடுகள். 56

3.3 நாணயங்கள் . 58

3.4 பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் (கலவோடுகள்). 60

3.5 ஏட்டுச் சுவடிகள். 63

3.6 பாவனைப் பொருட்கள். 67

3.7 ஏனைய தொல்லியற் சின்னங்கள். 70

அத்தியாயம் -04.

4.0 தொகுப்புரை. 76

உசாத்துணை நூல்கள் 81
கள ஆய்வு
பின்னிணைப்புக்கள்